## உயிரின் எச்சமும்,உறவுகளின் மிச்சமும்...

உயிரின் அருமை தன் முறை
வரும்வரை உணரப்படுவதில்லை...!
எங்கட ஈழ மக்களின் மீளாத்துயர்



சிலருக்கு அரசியல்....!.
சிலருக்கு அலட்சியம்....!
சிலருக்கு பொழுதுபோக்கு.....!

ஆர்மியின் பார்வையில் ஆறு வயது பாலகனும்
அறுபது வயது பெரியவரும் ஒன்றுதான்
அவர்கள் பயங்கரவாதிகளே.....!
ஆறு மாத கர்ப்பிணிக்கு அவசர பிரசவம்
ஆர்ட்டிலறி புண்ணியத்தில்....!

எங்கட குழந்தைகளும் ஐஸ்பாய்
விளையாடும். பதுங்கு குழிக்குள் ஒளிந்து....!
க்ளஸ்டர் குண்டு புண்ணியத்தில் குழந்தையின்
சரிந்த குடல் பறைசாற்றும் பல நாள்
பட்டினியை....!

சுதந்திரக் காற்றை சுவாசிக்க மட்டுமின்றி
கந்தக வாசனையை சுவாசிக்கவும்
கற்றுக் கொடுங்கள்...!
பூப்பெய்தும் எங்கள் பெண்களுக்கு

சடங்கு சுற்றுவதில்லை...!
ஆர்மிக்காரனிடம் கற்பிழக்காமல் தப்பிக்கக்
கற்றுக் கொடுங்கள்...!

நாங்கள் இறந்தவர்க்குப்



பிண்டம் வைப்பதில்லை...! ஆமாம்
எரிகணையால் பிண்டமாய்ப் போனவர்க்கு
பிண்டம் எதற்கு..!

ஐயா எங்களுக்கு பட்டும் வேண்டாம்
பகட்டும் வேண்டாம்...!

எங்கள் உயிரின் எச்சமும்
உறவுகளின் மிச்சமும் போதும்....!
இல்லையேல் எங்கள் பிணங்களை தின்று
எங்கள் பெண்களையும் , குழந்தைகளையும்
விட்டு விடுங்கள்...!

--- பிரநேசம்.
pranesam@yahoo.com
http://pradeepnesam.tamilblogs.com